http://www.maalaimalar.com Regd. No. CB/026/2021-2023 RNI. No. 30446/77

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 28-3-2021 (ஞாயிற்றுக்கிழமை) 10 பக்கம் 500 காசு ★★★ | மலர் 44 இதழ் 103

### 3 லட்சம் மரக்கன்றுகள் நட்டு சாதனை:

# மோடி பாராட்டியதால் பஸ் கண்டக்டர் நெகிழ்ச்சி

## தனது திட்டத்தை நாடு முழுவதும் கொண்டு சேர்க்க வலியுறுத்தல்

கோவை, மார்ச்.28-

கோவை கணபதி பகுதியைச் சேர்ந்தவர் யோகநாதன். அரசு பஸ் கண்டக்டராக பணியாற்றி வருகிறார்.

**3 லட்சம் மரக்கன்றுகள்**

இவர் தனக்கு வரும் வருமானத்தில் 40 சதவீதத்தை மரக்கன்றுகள் நடுவதற்காக செலவிட்டு வருகிறார். கடந்த 34 ஆண்டுகளாக கண்டக்டராக வேலை பார்க்கும் இவர் இதுவரை 3 லட்சத்துக்கும் அதிகமாக மரக்கன்றுகளை நட்டுள்ளார். கடந்த ஆண்டில் மட்டும் 85 ஆயிரம் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி உள்ளார்.

மேலும் பள்ளி, கல்லூரிகளுக்கும் சென்று மரம் நடுவதன் அவசியம் குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.



பள்ளி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கண்டக்டர் யோகநாதன்.

**பிரதமர் மோடி பாராட்டு**

கண்டக்டராக பணியாற்றிக் கொண்டே சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்டு உள்ள இவரது பணியை பிரதமர் மோடி இன்று பாராட்டினார். மனதின் குரல் நிகழ்ச்சியில் அவர் பேசுகையில் கோவையில் பஸ் நடத்துனர் பயணிகளுக்கு டிக்கெட்டுடன் மரக்கன்றுகளையும் தருகிறார். தன்னுடைய வருமானத்தில் பெருந்தொகையை இதற்காக யோகநாதன் செலவிடுவது பாராட்டுக்குரியது. அவரை பார்த்து அனைவரும் மரக்கன்று நட கற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி யோகநாதனை பாராட்டியபோது அவர் பஸ்சில் டிக்கெட் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தார். பிரதமர் பாராட்டியது பற்றி அவருக்கு செல்போன் மூலம் உறவினர்களும், நண்பர்களும் தகவல் தெரிவித்தனர்.

**மகிழ்ச்சி**

அதனை கேட்டு யோகநாதன் மகிழ்ச்சி அடைந்தார். அவரை தொடர்பு கொண்டு மாலை மலர் நிருபர் கேட்டபோது கூறியதாவது:- பிரதமர் மோடி என்னை பாராட்டியது மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது பாராட்டு என்னை மேலும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. இதன் மூலம் என்னை போன்று ஏராளமானோர் இனி மரக்கன்றுகள் நடும் பணியில் ஈடுபட ஆர்வம் காட்டுவார்கள் என்று நம்புகிறேன். நான் புதிதாக 5 மரத்திட்டம் என்ற ஒரு திட்டத்தை தொடங்கி உள்ளேன். ஒரு குடும்பத்துக்கு தென்னை, மா, பலா மற்றும் 2 பழம் தரும் செடிகளை வழங்குவது தான் அந்த திட்டம். ஒன்றரை வருடத்தில் அந்த செடிகள் மரங்களாக வளர்ந்து



கண்டக்டர் யோகநாதன்.

கனிகள் கொடுக்கத் தொடங்கும். அதன் மூலம் பண பலன் கிடைக்கும். இதன் மூலம் மக்களுக்கு மேலும் பல மரங்கன்றுகள் நட ஆர்வம் ஏற்படும். இந்த திட்டத்தை பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்று நாடு முழுவதும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார். யோகநாதன் மரக் கன்றுகள் நடும் பணிகளுக்காக பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். சி.பி.எஸ்.இ. 5-ம் வகுப்பு பாடப்புத்தகத்திலும் இவர் இடம்பெற்றுள்ளார்.

ஆனால் இன்று வரை அவர் வாடகை வீட்டிலேயே வசிக்கிறார். அவருக்கு மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.